**செய்தி வெளியீடு எண்: 664** **நாள்: 15.09.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.9.2018 அன்று தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் மதுரை மாவட்டம், மதுரை ஆயுதப்படை வளாகத்தில் 16 கோடியே 34 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 121 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 28 கோடியே 26 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 88 காவலர் குடியிருப்புகள், 1 காவல் நிலையம், 5 காவல் துறை கட்டடங்கள், 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மதுரை மாவட்டம், மதுரை ஆயுதப்படை வளாகத்தில் 16 கோடியே 34 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 121 காவலர் குடியிருப்புகளை காணொலிக் காட்சி மூலமாகத் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை – மணலியில் 50 காவலர் குடியிருப்புகள், திருப்பூர் மாவட்டம் – காங்கேயத்தில் 32 காவலர் குடியிருப்புகள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் – கழுகுமலையில் 6 காவலர் குடியிருப்புகள், என மொத்தம் 10 கோடியே 72 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 88 காவலர் குடியிருப்புகள்;

இராமநாதபுரம் மாவட்டம் – ஆர் எஸ் மங்கலத்தில் 63 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் நிலையம்;

சென்னை – தண்டையார்பேட்டையில் காவல்துறை இணை ஆணையர் (வடக்கு) நிர்வாகக் கட்டடம் மற்றும் புதுவண்ணாரப்பேட்டையில் காவலர்களுக்கான சமுதாய நலக்கூடம், கரூர் ஆயுதப்படைக்கான நிர்வாகக் கட்டடம், திருப்பூர் மாவட்ட காவல் அலுவலகம் மற்றும் ஆயுதப்படைக்கான நிர்வாகக் கட்டடம், என மொத்தம் 15 கோடியே 47 லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 காவல் துறை கட்டடங்கள்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – தேன்கனிக்கோட்டை, தருமபுரி மாவட்டம் – பாலக்கோடு ஆகிய இடங்களில் 1 கோடியே 43 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையக் கட்டடங்கள்;

என மொத்தம், 44 கோடியே 61 லட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு.உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.டி.கே. ராஜேந்திரன், இ.கா.ப., சென்னை பெருநகர காவல்துறை ஆணையர் முனைவர் அ.கா. விஸ்வநாதன், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் திரு.கே.பி. மகேந்திரன், இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. ம.நா. மஞ்சுநாதா, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 15.9.2018**